**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.26/2021 -PW1**

| | |
|---|---|
| Name | திரு.எம்.திருவேங்கடம் |
| Father Name | திரு.மாசிலாமணி |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **17.02.2026.**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் எல்லை பாதுகாப்பு படைப்பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். நான் எல்லை பாதுகாப்பு படைப்பிரிவில் எந்த மாநிலத்தில் எத்தனை வருடங்களாக பணிபுரிகிறேன் என்பதை என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை ஆரம்பத்தில் என் மனைவி தான் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். என் மனைவி இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் பிரதிவாதிகள் கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்கக் கேட்டு தாக்கல் செய்துள்ளார். 2013-ம் ஆண்டில் கிரைய ஒப்பந்தப்பத்திரம் ஏற்பட்டது. அந்த கிரைய ஒப்பந்தப்பத்திரத்திலுள்ள சரத்துகளின் படியும், எங்கள் வழக்குரை மற்றும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தின் படியும் 3 வருட காலத்திற்குள் கிரையப்பத்திரம் பதிவு செய்து கொள்ள வேண்டும் என நிபந்தனை உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3 வருட காலத்திற்குள் கிரைய ஒப்பந்தப்பத்திரத்தின் படி கிரையப்பத்திரம் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற விவரம் என் மனைவிக்கும், எனக்கும் தெரியும் என்றால் சரிதான். அந்த விவரம் எங்கள் பிள்ளைகளான 3 முதல் 5 வாதிகளுக்கும் தெரியும் என்றால் சரிதான். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 1-வது பத்தியில் நான் பிரதிவாதிகளிடமும், இறந்து போன ஆறுமுகம் என்பவரிடமும் விடுமுறைக்கு வரும் போது என் மனைவியுடன் சென்று அவர்களுடன் பேசியதாக சொல்லியிருப்பதில் நான் எந்த வருடம், எந்த மாதம், எந்த தேதி, எந்த இடத்தில் வைத்து பேசியதாக நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை ஒரு சதுர அடி ரூ.260/- வீதம் கிரையம் பேசியதாக என் மனைவி என்னிடம் சொன்னார். கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திய தேதியில் ரூ.10 லட்சம் முன் பணமாக என் மனைவி கொடுத்துள்ளார். பாக்கி கிரையத் தொகையை 3 வருடங்களுக்குள் இறந்து போன ஆறுமுகம் என்பவரிடம் கொடுத்துவிடுவதாக என் மனைவி அந்த கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தப்பத்திரம் ஏற்படுத்தும் போது ரூ.10லட்சம் முன் பணமாகவும், அதன் பின்னர் 2014-ம் ஆண்டு

ஆறுமுகம் என்பவரிடம் அவரது மருத்துவ செலவிற்காக அவர் கேட்டுக்கொண்டதால் கிரையத் தொகையில் ரூ.1,30,000/- கொடுத்தோம். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் 1-ம் பிரதிவாதி சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். 2-ம் பிரதிவாதி அந்த கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். 2014-ம் ஆண்டில் ரூ.1,30,000/- கொடுத்த போது வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்பத்திரத்தின் பின் பகுதியில் 2-ம் பிரதிவாதி சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். ரூ.1,30,000/-ஐ எந்த இடத்தில் வைத்து ஆறுமுகம் என்பவரிடம் கொடுத்தோம் என்பதை என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

கிரையத் தொகையில் என் மனைவி செலுத்த வேண்டிய வழக்கின் தொகை ரூ.12,68,000/-ஐ ஆறுமுகத்திடம் எத்தனை முறை எந்தெந்த தேதிகளில் கொடுப்பதற்கு அவரை என் மனைவி பார்த்தார் என்பதை என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பாக்கி கிரையத்தொகையை கொடுப்பதற்கு என் மனைவியுடன் நானும் சென்றேன். நான் என் மனைவியுடன் சேர்ந்து ஆறுமுகம் வீட்டிற்கு சென்றதாக என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 3-ல் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் குறிப்பிட்டு 3 வருட கால அவகாசம் முடிந்தவுடன் பிரதிவாதிகளுக்கு என் மனைவி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். ஆறுமுகம் 2014-ம் வருடம் நவம்பர் மாதத்தில் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 3-ல் ஆறுமுகம் கடந்த 01.11.2019 அன்று இறந்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தவறுதலாக சொல்லப்பட்டுள்ளது. கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் உள்ள படி பிரதிவாதிகள் பாக்கித் தொகையை பெற்றுக்கொள்ள மறுப்பதாகவும், கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்க மறுப்பதாகவும் காவல் நிலையத்தில் என் மனைவி புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.